

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 17. அன்னைப் பத்து

(தில்லையில் அருளியது)

ஆத்தும பூரணம்

(கலிவிருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந்நாதனார் அன்னே என்னும்





கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள்நின்று உருக்கி உலப்புஇலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்





நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்





ஆடரப் பூண்உடைத் தோல்பொடிப் பூசிற்றுஓர்
வேடம் இருந்தவாறு அன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண்டு என்உள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும்





நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் நாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் நாடர் பரந்துஎழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும்





உன்னற்கு அரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவது என்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவது என்நெஞ்சில் மால்அயன் காண்கிலார்
என்ன அதியசம் அன்னே என்னும்





வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்

பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும்

பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரி மேற்கொண்டுஎன்

உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்





தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆள்எம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆள்எம்மை ஆளும் அடிகளார் தம்கையில்
தாளம் இருந்தவாறு அன்னே என்னும்.





தையல்ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்உள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும்





கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே
இன்றுஎனக்கு ஆனவாறு என்னே என்னும்



ஸ்ரீ மாணிக்கவாசகர்